**செய்தி வெளியீடு எண்: 116** **நாள்:20.05.2021**

**<u>செய்தி வெளியீடு</u>**

சேலம் மாவட்டம், சீலநாயக்கன்பட்டியைச் சேர்ந்த மூதாட்டி சுசீலா என்பவர் மூச்சுத் திணறல் ஏற்பட்டு சாலையில் மயங்கி விழுந்த போது, அங்கிருந்த கிராம மக்கள் அவருக்கு கொரோனா தொற்று இருக்குமோ என்ற சந்தேகத்தில் அம்மூதாட்டிக்கு உதவி செய்யாமல் தயங்கி நின்றனர். அப்பொழுது, காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த இளையராணி என்ற இளம்பெண், துணிச்சலுடன் அம்மூதாட்டியை தனது இருசக்கர வாகனத்தில் அமர வைத்து, அம்மூதாட்டியுடைய மகனின் உதவியுடன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். ஆனாலும், துரதிஷ்டவசமாக அம்மூதாட்டி உயிரிழந்துவிட்டார்.

கொரோனா தடுப்பு ஆய்வுப் பணிக்காக இன்று (20.5.2021) சேலம் மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள், இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்து, கொரோனா தொற்று ஏற்படுமோ என்ற பயமின்றி மூதாட்டியை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற இளையராணி அவர்களின் தைரியத்தையும், மனித நேயத்தையும் மனதார பாராட்டி, அவருக்கு புத்தகத்தை பரிசாக வழங்கினார்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**